ஓம்
சிவமயம்



கலங்காத தீவினையை வாயரவின் கடுவிடத்துக்
கலங்காத நெஞ்சமு நின்றிரு மந்திரமன்புடனே
பலங்கா தவியாதுனும் பேறுங் கந்தவனம்பயிலும்
அலங்கார வேல்முருகா வருள்செய்தெனை யாளுதியே.

பொலிகண்டி, கந்தவன ஆலய ஆதீனகர்த்தாவும்
சைவப்பெரியார்

## அமரர் திக்கம் சி. செல்லையாபிள்ளை
## அவர்களின் ஏக புத்திரனுமாகிய:

# யோகீந்திரன்

(அத்தியட்சகர், சீமெந்துத்தொழிற்சாலை, காங்கேசன்துறை)

அவர்கள்

சிவபதம் எய்தியமையை நினைவுகூரும்

# நினைவு மலர்

12-4-1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்திரு. திக்கம்

# செல்லையாபிள்ளை யோகீந்திரன் அவர்கள்



தோற்றம் :
20 – 7 – 1929

மறைவு :
28 – 3 – 1989

## வெண்பா.

ஆயும் விபவமதில் சார்பங்குனிச் செவ்வாயில்
தேய் சஷ்டிபூராடம்சேர் நாளில்—பார்புகழ்சேர்
திக்கம் யோகீந்திரனும் சென்றான் சிராமலையின்
நக்கனடிப் போதை நயந்து.

— பொன். கருணாகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திக்கம்

# செல்லையாபிள்ளை யோகீந்திரன் அவர்கள்

## வாழ்க்கை வளம்

திக்கம் என்றவூர் சைவமும் செந்தமிழ்
புக்கி ருக்கும் புகழினைப் பெற்றது
தக்க நற்குடிச் சான்றவர் பற்பலர்
மிக்க தாமங்கு வீறுநர் பெருங்குடி.

வாண ராஞ்சின்னத் தம்பியின் மைந்தராய்ப்
பேணு நற்றவப் பேருரு வாய்வந்து
மாணு மேன்மையில் மிக்கவர் நல்லிசை
பூணு செல்லையா பிள்ளைபி றந்திட்டார்.

சைவ நன்னெறி போற்றியும் சீர்த்தமிழ்த்
தெய்வ ஞானம் சிறந்திடக் கற்றுடன்
உய்வை நல்குவ தாகிய ஆங்கிலம்
செவ்வை வயாய்க் கற்றுச் சீரின ராயினர்.

சுந்த மாவனக் கந்தனின் கோயிலைப்
பந்த மாகவே பற்றியே அன்னதன்
முந்து மாதின கர்த்தரு மாயினர்
எந்தை கந்தனின் இன்னருட் காட்பட்டார்.

தூகள றுபோதம் நல்லுரை கண்டனர்
அகந்தை யற்ற அருள்வழி நின்றனர்
இகந்து தீமைகள் இன்புகள் ஆற்றினர்
மிகுந்த மேன்மையர் மேதையு மாயினர்.'

இத்தகைய பாரம்பரியமும் பெருஞ்சிறப்புகளும் வாய்ந்த செல்லையாபிள்ளை அவர்களுக்குப் பொன்னையா என்ற சான்றோர் தலைமையனாகவும், இராசாப்பிள்ளை என்னும் அண்ணன் தம்பியாராகவும் அமைந்தனர். திருவாட்டி தங்கமுத்து கணபதிப் பிள்ளை இவர்தம் சகோதரியாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையா பிள்ளையவர்கள் உரியகாலத்தில் தமதுகுடிக்கு ஒத்தகுணனும் ஒத்தநலனும் வாய்ந்த செல்லம் இராசமுத்து என்றமங்கையர் திலகத்தைக் கடிமணம் புரிந்து தமது மனை விளக்காய் ஏற்று, இரதியும் மன்மதனும் எனக்கூடிவாழ்ந்து வந்தார். அவர்தம் குடும்பவாழ்வை மலர்விக்கவும் தாய்மாமன் மாரராம் இரத்தினம், இராசக்கோன், திரவியம் (ஓய்வு பெற்ற நீர்ப்பாசன ஓவசியர்) அன்புமாமி தங்கமுத்து ஆகியோர் அரும் பேறெனக் களித்திடவும், பெரியப்பா, சிற்றப்பாமார்பெருமிதம் உறவும் அறுவர் பிள்ளைகள் அவனியில் வந்துதித்தனர். அவர்கள், நாகபூசணி, பார்வதியம்மை (இளைப்பாறிய உபதபாலதிபர்) பொன்னம்மைதேவி (ஓய்வுபெற்ற சங்கீத விரிவுரையாளர், கோப்பாய் அரசினர் ஆசிரியர்கலாசாலை) யோகீந்திரன் (அத்தியட்சகர் சீமேந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை) சோ ாகாம்பிகை (சங்கீத ஆசிரியை, இராமநாதன் கல்லூரி) சிவயோகநாயகி (விரிவுரையாளர் கோப்பாய் ஆசிரியகலாசாலை) இவர்கள் தம் தாய்மாமனார் இராசாக்கோன் அவர்களின் மக்களான குழந்தைவேலு, சின்னத்தம்பி, விவேகானந்தம், சதாபக்தி, யோகானந்தம் என்னும் மைத்துனர்களும், குமரகுரு, ஆதித்தன் ஆகிய ஒன்றுவிட்ட சகோதரர்களும், அவர்களின் மனைவியார் களான சாந்தநாயகி, மனோன்மணி ஆகிய மைத்துனிமாரும் ஒன்றுபட்டு அன்போடு இணைந்து வாழ்ந்தனர்.

இவர்கள் மணப்பருவம் எய்தியகாலை நாகபூஷணி, தம்பிப்பிள்ளையின் நன்மைந்தராம் குமாரசாமி அவர்களை (தலைமை லிகிதர், மதுபரிபாலனப்பகுதி, கொழும்பு இவர் இன்று இறையடி எய்திவிட்டார்) மணம் புரிந்தார் இவர்களுக்கு ஜெய மனோகரி, ஸ்கந்தாரணியன், செல்லையாபிள்ளை என்ற மூவர் அரும்பெறல் நற்சேய்களாய் உதித்தனர். ஸ்கந்தாரணியன் நற்குணப்பாவையாம் விஜயலட்சுமியையும், செல்லையாபிள்ளை தங்கராணியாம் பொன்மனச்செல்வியையும் மணம்புரிந்து இல் லற வாழ்வினை இனிதே நடத்துகின்றனர். ஸ்கந்தாரணியனுக்கு ஜனகன், அபிராமி, என்போரும் செல்லையாபிள்ளைக்குத் தக்ஷாயினி, கங்காசுதன் என்போரும் நன்மக்களாவார்.

அடுத்த மகளாராம் பொன்னம்மைதேவி துரைசிங்கம் அவர்களின் அரும்பெறற் புதல்வரும், விற்பனைத்திணைக்களமுகாமையாளருமாயிருந்து ஓய்வுபெற்று இன்று அமரராகிவிட்ட பத்மநாதன் அவர்களின் பிரியபாரியரானார். இவர்களுக்குக் கல்யா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணவேலவன் குழந்தைவேலு, சுமதி ஆகியோர் பிள்ளைக்கலிதீர்க்கும் மக்கட் செல்வங்களாய் வந்துதித்தனர். மற்றொரு மகளும ஒப்பில்லாத திறமையாளருமான சிவயோகநாயகி அபபாத்துரையின் அன்புமைந்தர் இராமநாதனைக் கைத்தலம் பற்றிக்கடிமணம் புரிந்தனர்.

சட்டத்தரணியும், திருக்கேதீச்சர ஆலயசபையோடு தம்மைப்பிணைத்துக்கொண்டு அரும்பெரும்பணியாற்றியவருமான இராசாப்பிள்ளை நமசிவாயம் (ஒன்றவிட்டசகோதரர்) விஜயலட்சுமியாம் அருங்குணவாட்டியை மணவினையாற்றி ராஜன் கனகரத்தினம் (டாக்டர்), சிவகுமாரன், சகுந்தலா, ஜெயேந்திரன் (டாக்டர்) ஆகியோரின் அன்புத்தந்தையாய் ஆகியுள்ளார் இன்னும் பவானியம்பா, பரமேஸ்வரி, ஞானம்பிகை, குமரகுருசரஸ்வதி, ஆதித்தனன் வனேஸ்வரி என்னும் நல்லோர் இவர்தம் உடன்பிறவாச் சகோர சகோதரிகளாக அன்புசெலுத்திவருகின்றனர்.

இனி எமது நினைவஞ்சலிக்கு உரிய நாயகராம் யோகீந்திரன் அவர்களின் வாழ்க்கை வளந்தினை நோக்குவோம் பெற்றோர்க்கும் உற்றோர்க்கும் மேற்குறித்த உறவினர்க்கும் கண்ணின் கருமணியாய் இலங்கிக் கலையினல் திங்கள் எனவளர்ந்த அவர் தமது கல்வியை வல்வைச் சிதம்பராக் கல்லூரியிலும், திருநெல்வேலியில் பரமேசுவராக்கல்லூரியிலும் பெற்றுச்சிறந்தார். பின்னர் காங்கேசன் துறைச்சீமேந்துத்தொழிற்சாலையிலே பணிபுரியத் தொடங்கி அத்தியட்சகராம் உயர்பதவியினை அடைந்தார்.

மணவாளப் பருவத்தை மருவியபோ திவர்மேன்மைக்
கணியாக அமைந்தநற் குடும்பமெனக் கைதடியில்
இணையில்லாப் பெரியோராம் சந்திரசே கரர்என்பார்
துணையாளர் நிருவாகத் துறையினிலே கச்சேரி.

அமர்ந்தாரும் அவர்இனிய மனையாளாம் அன்புமிகும்
அமைபோலும் தோளினர்நல் விரத்தின்மாம் நங்கையு
அமர்ந்தில்ல வாழ்வதனில் பயனுகப் பெற்றெடுத்த(டன்
கமலாம்பி கைத்திருவைக் கடிமணமும் புரிந்தனரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தை இனிதறமாய் எவ்திசையும் இசைபரப்பி
நல்லாக நடத்திநல உற்றுரும் உறவினரும்
எல்லாரும் போற்றிடவே இன்பத்தில் துளைந்தபடிப்
பல்லாரும் பாசமுறும் சேய்நால்வர் பெற்றனரே

கந்தசட்டி விரதத்தின் பயனாகப் பெற்றோர்கள்
அந்தமிலா மகிழ்வுடனே அகிலத்திற் களித்தமகன்
சிந்தனையில் தூயவராம் யோகீந் திரன்தந்தை
கந்தவனக் தேவத்தா னத்ததிபதி உரிமையினைப்

பெற்றுமிகச் சிறப்புடனே பேராளன் முருகனுக்கே
உற்றபணி மனமொழிமெய் ஒருங்கமையப் பக்தியுடன்
நற்றவராய் நடத்திவந்த நன்மையினை யாரறியார்?
கொற்றவன்போல் எச்சிறப்பும் குறைவறவே பெற்
றனரே.

## மக்களின் மாண்பு

சீரமை யோகீந் திரன்கம லாம்பிகை
செய்தவப் பயனானெனும் மைந்தன்
பேரமை செல்லை யாபிள்ளை சவுதி
சென்றுமின் முகாரியு மா றன்
ஆரமு தனையான் அவன்தம்பி றமேஷம்
அரும்பொறி யியல்தனைக் கற்கச்
சீரமை திருச்சி தன்னிடை யுள்ளான்
சிறந்தநற் குழகனே கல்வி.

கோயமுத் தூரில் மேனிலைப் பள்ளி
குறுகியங் கின்புறக் கற்பான்
மேயகண் மணியளாம் ஏகபுத் திரியாம்
மிகுநலக் கார்த்திகா யினியும்
ஆய்ந்திடு கல்வி யாழ்நகர் அமைந்த
மகளிர்கல் லூரியிற் கற்பாள்
தேயமும் உறவும் போற்றிடச் சிறப்பில்
செழித்துமே இவர்கள்உள் ளனரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபதப்பேறு.

இவ்வணம் கல்வி செல்வம் இயைந்திடு குடும்பப் பேறு
எவ்வெவர் போற்றும் சுற்றம், ஏற்றமார் பண்பு யாவும்
பவ்விய மாகப் பெற்றுப் பாரினில் சிறக்க வாழ்ந்த
கவ்வையில் அண்ணல் யோகீந் திரன்இந்தி யாவுக் கேகி

மைந்தர்கள் தம்மைக் கண்டு மகிழவே நினைந்தார் ஆயின்
அந்தகன் யமனும் அன்னார் கனவினை இடைத் தடுக்க
முந்தினன் முடுகி வானில் திருச்சிசென் றிட்டபோதில்
நொந்திட உயிரைப் பற்றித் துணுக்கென விரைந்தான் அங்கே

பிறந்தமண் துறந்து சென்ற பெரியரின் மரணச் செய்தி
பறந்துமே வரவும் இல்லாள் மக்களோ டுடன்பி றந்தார்
சிறந்தமைத் துனர்கள்வேறு மைத்துனி மாமன் மாமி
உறுந்துயர் வார்த்தை யாலே உரைத்திட முடியாதையோ.

புகழுடல் மண்ணிறுத்திப் பொய்யுடல் மறைத்துச் சென்ற
புகழ்பெறு மண்ண லாரின் பூவுல கத்து வாழ்க்கை
மகிழ்வுடன் கழிந்த தாயின் மாயமாய் மறைந்த தாலே
அகழ்வுறு மனத்த ராகி அன்பர்கள் கதறுகின்றார்

தேற்றம்

என்செய்வோம் நாங்கள் இகவாழ்க்கை நீர்க்குமிழி
என்பதைக் காட்டி இறைதாளில் - சென்றவரின்
ஆன்மாவின் சாந்திக் கருள்க எனமுருகன்
பொன்னடியே போற்றிடுவோம் நாம்.

## ஓம் சாந்தி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகிந்திரனின் இல்வாழ்வு நல்வாழ்வாய் அமைய அவரின் மனைக்கோயில் தீபமாக ஒளிவிட்ட கமலாம்பிகைக்குத் தமக்கை ஒருவர், தமையனர் ஒருவர், தம்பியார் ஒருவர் தங்கையர் மூவர், என ஐவர் உடன் பிறப்பாளராவர் அவர்களின் வாழ்க்கைவளம் பின் வருவது ..

| உடன்பிறப்பாளர் பெயர்கள் | கணவர் அல்லது மனைவி | ஆண் பெண் மக்கள் | பேரர் பேத்தியர் |
|---|---|---|---|
| 1 மகேஸ்வரி | சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலையத் தலைவர்) | மதிவதனு<br>கணவர் இராமநாதன் (தொ. நு. இயலர்) | அபிராமி<br>அகல்யா |
| | | பாஸ்கரன் (தொ. நு. வி.)<br>மனைவி, இந்திரா | |
| | | ரவீந்திரன்<br>மனைவி, வாணி | விஷ்ணு வர்த்தன் |
| | | காந்திமதி<br>கணவர், உதயகுமார் (பொறியியலாளர்) | ராதிகா<br>அகிலன் |
| | | நிரஞ்சன் (பொறியியலாளர்) | |
| 2 அமரர் சிவதாசன் (மின்பொறியியலாளர்) | சந்திரதிலகம் | பிரேமானந்த்<br>சசி<br>பிரேம்குமார் | |
| 3 சிவானந்தன் (பணிப்பாளர் ஸ்டேர்லிங் மறைன்) | பத்மாவதி (கணக்காளர், மெட்டலிக்ஸ்) | பிரகாஷ் | |
| 4 மனோன்மணி K M P., I D M. | சிவதொண்டன் கொலெற்றஸ், சிறுப்பர் | பவன் | |
| 5 லோகேஸ்வரி (டாக்டர், யாழ். வைத்தியசாலை) | குமாரசாமி G.O.B.A. | வசுமதி<br>பிரதீன் | |
| 6 விமலாதேவி (N. S. B யாழ்.) | ஜெயதேவன் (வர்த்தக முகாமையாளர் கொழும்பு ஸ்ரோர்ஸ் | காயத்திரி<br>ஜனகன் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகிந்திரனின் இல்வாழ்வு நல்வாழ்வாய் அமைய அவரின் மனைக்கோயில் தீபமாக ஒளிவிட்ட கமலாம்பிகைக்குத் தமக்கை ஒருவர், தமையனுர் ஒருவர், தம்பியார் ஒருவர் தங்கையர் மூவர், என ஐவர் உடன் பிறப்பாளராவர் அவர்களின் வாழ்க்கைவளம் பின் வருவது ..

| உடன்பிறப்பாளர் பெயர்கள் | கணவர் அல்லது மனைவி | ஆண் பெண் மக்கள் | பேரர் பேத்தியர் |
|---|---|---|---|
| 1 மகேஸ்வரி | சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற புகையிரத நிலையத் தலைவர்) | மதிவதனு<br>கணவர் இராமநாதன் (தொ. நு. இயலர்)<br>—<br>பாஸ்கரன் (தொ நு. வி.)<br>மனைவி, இந்திரா<br>—<br>ரவீந்திரன்<br>மனைவி, வாணி<br>—<br>காந்திமதி<br>கணவர், உதயகுமார் (பொறியியலாளர்)<br>—<br>நிரஞ்சன் (பொறியியலாளர்) | அபிராமி<br>அகல்யா<br><br>விஷ்ணு வர்த்தன்<br><br>ராதிகா<br>அகிலன் |
| 2 அமரர் சிவதாசன் (மின் பொறியியலாளர்) | சந்திரதிலகம் | பிரேமானந்த்<br>சசி<br>பிரேம்குமார் | |
| 3 சிவானந்தன் (பணிப்பாளர் ஸ்டேர்லிங் மறைன்) | பத்மாவதி (கணக்காளர், மெட்டலிக்ஸ்) | பிரகாஷ் | |
| 4 மனோன்மணி R M P., I D M. | சிவதொண்டன் கொலெற்றஸ், சிறுப்பர் | பவன் | |
| 5 லோகேஸ்வரி (டாக்டர், யாழ். வைத்தியசாலை) | குமாரசாமி G.O.B.A. | வசுமதி<br>பிரதீன் | |
| 6 விமலாதேவி (N. S. B யாழ்.) | ஜெயதேவன் (வர்த்தக முகாமையாளர் கொழும்பு ஸ்ரோர்ஸ் | காயத்திரி<br>ஜனகன் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிகண்டிக் கந்தவனநாதன் திருப்பாக்கள்.

ஐயனீ பெற்றவரு ளென்னைநீ தெய்வநீ
    யடிகணீ யுறவுநீயென்
ருதரவி னம்பிய வென்னைக்கொடிய மிடியாலு
    மளவிறுய ரம்புரிவுறா உம்
வெய்யநோ யாலுமொழி யாதுற வுடற்றிடனின்
    மெய்யருட் கேற்றதேயோ
வேறொருவர் பாற்குறை யிரந்திடுவ ஞேநின்னின்
    மேம்பட்ட தேவுமுண்டோ.

செய்யனே மாசுர சமூகசெ விதபாத
    சிந்தனு தீதவநக
திமிரமல மறவந்த தேசோ மயானந்த
    செகதீச பரிபூரண
மையனுய் தீர்த்திடு மருந்தே பெருங்கருணை
    வாரியே கந்தவனமேல்
வருமகுல பரமசிவ குருபரமெய் விரதர்புகழ்
    வரதவுவ கருண்முருகனே

பாலவர்கள் செந்தமிழ்த் தொடையமுது பருகுமுன்
    பன்னிரு திருச்செவிகளுட்
பாவியே னேனழவின் ணப்பம் புகுந்திடப்
    பகருமொரு செவியில்லையோ
ஏவரையு நோக்கியின் னருள்பொழியு முன்கருணை
    யீராறு விழிகளுள்ளே
என்னிலம் பாட்டைக் கெடுக்குங் கடைக்கணுேக்
    கீயவொரு விழியில்லையோ.

தேவமரு மீராறு செங்கையி லெனக்கவலை
    சேதிக்க வொருகையில்லையோ
தீர்த்தப் பெருங்கருணை வெள்ளத்தில் மலவிடாய்
    தீர்க்கவொரு துளியில்லையோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல்புரி கடமையுன் மீதில்லை யோமணைக்
கவலைமொழி கந்தவனம்வாழ்
கலபமர கதமயிலி னலகிலுயிர் தழையவரு
கலியாண வேல்முருகனே.

போமிளமை செல்வமெனப் புலம்புற்று மடியால்புவியின்மீது

தோமறுநேர்க் காந்தமனத எதிர்க்காந்தம் இழுத்தலென
இழுத்து நம்மை

ஏமமுறச் செய்திடவே இருக்கின்றான் கந்தவனத்திறைவன்
நல்வீர்!

காமமுறக் கடம்பனடி கைதொழுவோம் அவன்தானே
காத்து நிற்பான்.

கன்னங் கரிய குயிலே கன்னி யழகு மயில்நான்
முன்னம் முருகன் வரவால் மூளும் கனவில் அழிவேன்
தின்னும் நினைவு மிகையான் தீயின் மலராய் எரிவேன்
மன்னும் கந்த வனத்தான் மகிழ்ந்து வரநீ கடவாய்.

வேலவ னேயருள் வானவ னேயுற
மேவின மேமகிழ் கந்தவனம்
பாலவ னேர்மொழிப் பாவைய ரோபுகழ்
பாடின ரேமுனம் ஆடினரே
மாலவ னேர்மரு காமுரு காமனம்
வைத்துனை யேநனி வாழ்த்திடவே
மேலவ னேயெனம் யாள்பவ னேபகை
மேந்தவ னேயினி வந்திடுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரு திக்கம் செல்லையாபிள்ளை யோகீந்திரன் அவர்கள் சிவபதம் அடைந்த ஞான்று அன்னாரின் பிரிவாற்றாமையை நினைந்து கூறிய இரங்கற்பாக்கள்.

### வெண்பா

கந்தவனத்துக் கலியாண வேலவனார்
சொந்தமாய் உன்னைச் சேர்த்துவிட்டார் - இங்குநாம்
யோகீந்திரா! என்று ஓலமிட்டே அலறுகின்றோம்
போன இடம் தெரியாது நின்று.

தவநெறி சற்றுமில்லாத் தன்மையராம் நாங்கள்
அவமே கிடந்து அலறுகின்றோம் - யோகேந்திரனே உன்
சிரித்தமுகம் காணாது திக்கெல்லாம் தேடுகின்றோம்
பெரிய இடமே சேர்ந்துவிட்டாய் நீ

### விருத்தம்

செல்லையாபிள்ளை சிறப்புடனே பெற்றெடுத்த
வல்லாளா! யோகீந்திரனே ! மறுவில்லா மாணிக்கமே! நீயும்
நல்லார் உலகத்துள் நாடியே சென்றுவிட்டாய்
கல்லாத மானிடர்யாம் கதறுகின்றோம் இங்கிருந்து.

தில்லைநடராசன் திருவடியை வணங்கி உன்தன்
தொல்லை வினையாவும் தொலைப்பதற்கே சென்றிருந்தாய்
எல்லையினில் நின்ற எமராசன் தூதுவர்கள் உன்னுயிரை
தில்லைநகர் செல்லாது திருச்சியிலே கவர்ந்து கொண்டார்.

அன்பே உருவமாய் அமைந்த யோகீந்திரனே உன்தன்
இன்பான மொழிகேட்க இயலாது தவிக்கின்றோம் உன்
அன்பான தாயாரும் அருகிருந்த மனைவிமக்கள் சோதரரும்
நின்பாசம் மறவாது நினைநினைந்து தித்தலுமே புலம்புகின்றார்.

மின்னுமைல் முழங்காமல் நோய் கொடிகள் இல்லாமல்
தென்புலத்தார் திசைநோக்கிச் சிறப்புடனே சென்றுவிட்டாய்
மன்னாநீ சென்ற இடம் மாநிலத்தோர் அறியாது
எந்நாளும் யோகீந்திரா என்றே அழுகின்றார்.

யோகீந்திரனை என்றும் யோகியரை உள்ளத்து இருத்துவானை
நீதியே எவ்விடத்தும் நிறுப்பானை — நன்நெஞ்சே
பேசாது இருந்தால் பெரும்பழிகள் கூடிடுமே
கூசாது என்றும் அவனை நினை.

சாந்தி !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திக்கம்

# செல்லையாபிள்ளை யோகீந்திரன்

அமரர் செ. யோகேந்திரா 28-3-89ல் சிவபத மடைந்தார். இவர் காங்கேசன் சீமேந்துகூட்டுத்தாப னத்தில் 1950ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை பற் பல உத்தியோகஸ்த்தராலும், தொழிலாளர்களாலும், போற்றப்பட்டு மெச்சப்பட்டு கடமையாற்றிவந்தார்.

இவருக்குப் பணிக்கப்பட்ட சகல வேலைகளையும் கண்ணுங்கருத்துமாக எவ்விதமான கஷ்டங்களின் மத் தியிலும் இனிது நிறைவேற்றிப் பலராலும் போற்றப் படும் ஆற்றலுடையவர். அன்னாரது திடீர்மறைவு எங் கள் எல்லோரையும் ஆழ்ந்த துயரத்தில் தள்ளியுள்ளது இவர் ஒரு திடமான கொள்கை உடையவர். அத்து டன் கடவுள்பக்தியும், நம்பிக்கையுமுடையவர்.

இவரைப் பிரிந்து வாழும் மனைவி, பிள்ளைகளு க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு இவருடைய ஆத்மா சாந்தியடைய இறை வனைப் பிரார்த்திப்போமாக.

சிவில், பொதுவேலைப்பகுதி
ஊழியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எங்கள் நன்றி !

எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு என்றுமே நீங்காத நினைவுறுத்தி இவ்வுலக வாழ்வை நீக்கி இறைபதம் எய்திய,

எங்கள் குடும்பத்தலைவர் அவர்களின் மரணச் செய்திகேட்டு ஓடோடிவந்து பலவழிகளிலும் உதவியவர்களுக்கும், மரணச் சடங்குகளிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்து, எமக்கு ஆறுதல் அளித்தவர்களுக்கும் அனுதாபச்செய்திகள் அனுப்பியவர்களுக்கும் அன்னாரின் ஆத்மசாந்திக்காய அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியங்களிற் கலந்து கொண்டவர்களுக்கும், எமக்குப்பலவகைகளிலும் அவ்வப்போது உதவிய இனசுற்றத்தார். அயலார், நண்பர்கள் அனைவருக்கும் நாம் நன்றி கூறுகிறோம்.

குடும்பத்தினர்கள்

இருபாலை
12-4-1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org